பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 129 நாள்: 12.10.2017

## மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு பயிற்சி அளித்திட பயிற்சியாளர்கள் தேர்வு நடைபெற உள்ளது

சென்னை மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான, உள்ளடக்கிய கல்வித் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக முற்றிலும் தற்காலிகமாக மாதம் ஒன்றிக்கு ரூ.15,000/– மதிப்பூதிய அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC) வாயிலாக 9 இயன்முறைப் பயிற்சியாளர்கள் (Physiotherapist), ஒரு பேச்சுப்பயிற்சியாளர் (Speech Therapist) தெரிவு செய்யப்பட உள்ளனர்.

கீழ்க்காணும் தகுதியின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் 20.10.2017–க்குள் முழு விவரங்களுடன் (கல்வித் தகுதி மற்றும் அனுபவச் சான்றிதழ் சான்றொப்பமிடப்பட்ட நகல்களுடன்) கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கீழ்க்காணும் முகவரியில் நேரில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இயன்முறைப் பயிற்சியாளர்கள்** : Bachelor of Physiotherapy (BPT) with Minimum 50% in their graduation என்ற குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**பேச்சுப் பயிற்சியாளர்** : Bachelor of Audiology and Speech Language Pathology (BASLP) (or) B.Sc., Speech Pathology with Minimum 50% in their graduation என்ற குறைந்தபட்சக் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 97888 58382 என்ற கைப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி** :

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
மாவட்டத் திட்ட அலுவலகம்,
அனைவருக்கும் கல்வி இயக்கம்,
மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
எழும்பூர், சென்னை–08.

செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி